## புனித அந்தோணியார் ஆலயம், சத்தியமூர்த்தி நகர், சென்னை - 39
## ஞாயிறு அறிவிப்புக்கள் - 4.6.2017

01. இன்று தாய் திருச்சபை பரிசுத்த ஆவியாரின் வருகையின் பெருவிழாவினை சிறப்பித்து மகிழ்கின்றது. இன்று திருச்சபையாகிய நம் அனைவரின் பிறந்தநாளும் கூட. இன்றுடன் பாஸ்கா காலம் நிறைவு பெறுகிறது. நாளையிலிருந்து நாம் பொதுக்காலத்தில் நுழைகின்றோம். அடுத்த ஞாயிறு, மூவொரு கடவுளாம் தமத்திருத்துவத்தின் பெருவிழாவினை கொண்டாடுகின்றோம்.

02. இன்றைய திருப்பலி முடிந்தவுடன் இளையோர் கூட்டமும், மறைக்கல்வி வகுப்புகளும் வழக்கம்போல் நடைபெறும். மறைக்கல்வி வகுப்பு ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிற்சிக் கூட்டம் இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை சிட்டாடல், தீபகம் மறைப்பணி மையத்தில் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

03. திருவிழாவின் போது புதுநன்மை பெறப்போகின்ற பிள்ளைகளுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும் வருகிற சனிக்கிழமை, ஜுன் 10-ம் நாள், காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை சிறப்புத் தியானம் நடைபெறும். அந்நேரத்தில் பாவசங்கீர்த்தனமும் கேட்கப்படும். மேலும் புதுநன்மை விழாவிற்கான பயிற்சியும் அந்நாளில் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

04. வருகிற செவ்வாய்க்கிழமை, ஜுன் மாதம் 6-ம் நாள், திருவிழா தயாரிப்பிற்கான கீழ்வரும் கூட்டங்கள் நடைபெறும்:

07.30 a.m. – திருவிழா கமிட்டி
08.30 a.m. – தேர்ப்பவனி கமிட்டி
09.30 a.m. – எசேக்கியேல் பகுதி அன்பியத் தலைவர்கள்
10.00 a.m. – எரேமியா பகுதி அன்பியத் தலைவர்கள்
10.30 a.m. – ஏசாயா பகுதி அன்பியத் தலைவர்கள்
11.00 a.m. – தானியேல் பகுதி அன்பியத் தலைவர்கள்
11.00 a.m. – மரியாயின் சேனைத் தலைவர்கள்

05. வருகிற வாரத்தில் பங்கு தந்தையின் தலைமையில் நடைபெறவுள்ள அன்பியக் கூட்டங்கள்:

1.6.2017 – திங்கள் - புனித சின்னப்பர் மற்றும் மோனிக்கா அன்பியக் கூட்டங்கள்
7.6.2017 – புதன் - புனித லூக்காஸ் மற்றும் இஞ்ஞாசியார் அன்பியக் கூட்டங்கள்
8.6.2017- வியாழன் - புனித தொன்போஸ்கோ மற்றும் வெரோணிக்கா அன்பியக் கூட்டங்கள்

06. வார திருநாட்கள் விவரம்:

05/6, திங்கள் - புனித போனிபாஸ் நினைவு
06/5, செவ்வாய் - புனித நார்பர்ட் நினைவு மற்றும் புனித அந்தோணியாரின் வார நாள்
08/6, வெள்ளி - புனித எப்ரேம் நினைவு
09/6, சனி - சகாயத்தாயின் நவநாள் தினம்.

07. ஜுன் மாதம் இருதய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம். எனவே குடும்பங்களில் திருஇருதய ஆண்டவர் படத்தை ஸ்தாபகம் செய்ய விரும்புவோர் மற்றும் புதுப்பிக்க விரும்புவோர் பங்கு தந்தையை அன்பியத் தலைவரோடு வந்து முன்னதாகவே சந்தித்து ஏற்பாடு செய்திடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

08. நம் பங்கின் ஆண்டு விழா மற்றும் குடும்ப விழாவான நம் புனித அந்தோணியாரின் ஆண்டு விழாவானது ஜுன் மாதம் 9--ம் நாள், வெள்ளிக்கிழமை கொடியேற்றுத்துடன் துவங்கி 18-ம் நாள், ஞாயிற்றுக்கிழமையன்று திருவிழா திருப்பலி மற்றும் புதுநன்மை வழங்கல் நிகழ்வோடு நிறைவடையும். புனிதரின் கொடி பவனியானது M.K.B.நகர் பாரி குடியிருப்பிலுள்ள அன்னையின் கெபியில் துவங்கி

பவனியாக ஆலயம் வந்தடையும். அனைத்து பங்கு மக்களும் முழு ஒத்துழைப்புக் கொடுத்து ஆண்டுவிழாவினை ஒரு அருள்மிகு குடும்ப அனுபவமாக அமைத்திட உங்களை வேண்டுகின்றோம். நவநாட்களின் போது காலைத் திருப்பலிகள் நடைபெறாது. வருகிற ஞாயிறு காலை 6.00 மணித் திருப்பலி மட்டும் நடைபெறாது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

09. பங்கு திருவிழாவிற்கு குறைந்தபட்ச குடும்பத் தொகையாக ரூபாய் 150, நவநாட்களில் ஒரு நாள் உபயமாக ரூபாய் 1000, திருப்பலி கருத்துக்காக ரூபாய் 100 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் கோவிலுக்குத் தேவையான காணிக்கைப் பொருட்களை தனிக்குடும்பமாகவோ அல்லது பலகுடும்பங்களாக இணைந்து கொடுக்க விரும்புவோர், திருவிழாவிற்காக நன்கொடை கொடுக்க விரும்புபவர்கள், தேர் அலங்காரம், மின்விளக்குகள், ஜெனரேட்டர், உணவு ஆகிய செலவினங்களை ஏற்றுக்கொள்ள விரும்புவோர் பங்கு தந்தையை அணுகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

10. இவ்வருடம் 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற நம் பங்கின் பிள்ளைகளை பங்கின் ஆண்டு விழாவின் போது வாழ்த்தி பரிசளிக்க விரும்புகின்றோம். எனவே 10-ம் வகுப்பில் 400-க்கு மேல், 12-ம் வகுப்பில் 1000-க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் மதிப்பெண் நகலை பங்கு அலுவலகத்தில் ஜுன் மாதம் 5-ம் தேதிக்குள் கொடுத்திடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

11. திருமண அறிவிப்புகள்: நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, MKB நகரில் வசிக்கும் பெற்றோர் சுரேந்திரன் - வசந்தா அவர்களின் மகன் சாந்தா ராமுக்கும், செங்கல்பட்டு மறைமாவட்டம், புனித குழந்தை இயேசு பங்கு, செம்மஞ்சேரியில் வசிக்கும் பெற்றோர் ஜான் - பிரபாவதி அவர்களின் மகள் ஜான்சி ராணிக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது மூன்றாவது ஓலை. இம்மணமக்களுக்காக செபிப்பதும், இத்திருமணத்தில் ஏதேனும் விக்கினமிருந்தால் பங்குத் தந்தைக்கு தெரிவிப்பதும் நம் அனைவரின் கடமையாகும்.